# விழுப்புரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப.,

ந.க.பே.மே/ 24388 /2018 நாள்: 11 .09.2018

பொருள்: பேரிடர் மேலாண்மை - விழுப்புரம் மாவட்டம் - வடகிழக்கு பருவமழை 2018 - வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு **கோட்ட அளவில் மண்டல அலுவலர்கள் (Sub-Divisional Level Nodal Officers) நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது**

பார்வை: கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்: ந.க. RC.No. N.C.I(4)/3838/2018, நாள்: 25.08.2018

..............

**ஆணை:**

2018 வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப் பணிகள் மற்றும் வட்ட அளவில் நியமனம் செய்யப்பட்டுள்ள மண்டல அலுவலர்களை கண்காணிக்கும் பொருட்டு விழுப்புரம் மாவட்டத்திற்கு, **கோட்ட அளவில் மண்டல அலுவலர்கள் (Sub Divisional Level Nodal Officers)** இதன் மூலம் நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | கோட்டத்தின் பெயர் | நியமனம் செய்யப்படும் கோட்ட அளவிலான மண்டல அலுவலர் |
|---|---|---|
| 1 | திண்டிவனம் | சார் ஆட்சியர், திண்டிவனம்.<br>கைப்பேசி எண்.: 9445000423 |
| 2. | திருக்கோவிலூர் | சார் ஆட்சியர், திருக்கோவிலூர்.<br>கைப்பேசி எண்.: 9445000422 |
| 3. | விழுப்புரம் | வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம்.<br>கைப்பேசி எண்.: 9445000424 |
| 4. | கள்ளக்குறிச்சி | வருவாய் கோட்டாட்சியர், கள்ளக்குறிச்சி.<br>கைப்பேசி எண்.: 9445000421 |

வடகிழக்கு பருவமழைக்காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணித்திடும் பொருட்டு, தங்கள் வட்டத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள மண்டல அலுவலர்களைக் கொண்டு குறுவட்ட வாரியாக அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கொண்ட குழுக்களை **(Firka Wise Inter-Departmental Zonal Teams)** நியமனம் செய்து செயல்முறை ஆணையினை அனுப்பி வைத்திடவும், நியமனம் செய்யப்பட்டுள்ள குழுக்கள் பாதிப்புக்குள்ளாகும் பகுதியினை ஆய்வு செய்து அறிக்கையினை மண்டல அலுவலர்கள் மூலமாக அனுப்பி வைத்திடவும், மேலும் மழைக்காலங்களில் கோட்ட அளவில் கண்காணித்து அவ்வப்போது அறிக்கை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்.இல.சுப்பிரமணியன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விழுப்புரம்.

//உ.ந.உ.ப.//

மாவட்ட ஆட்சியருக்காக

11/09/2018

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள், விழுப்புரம் மாவட்டம்.

நகல்: கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.